தமிழ்நாடு அரசு

சுருக்கம்

வனம்–கோயம்புத்தூர் மாவட்டம் பொள்ளாச்சி–கோபாலபுரம் சோதனைச் சாவடி அமைத்தல்–அறிவிக்கை வெளியிடுதல்–ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

சுற்றுச்சூழல் மற்றும் வனத் (வனம்.13) துறை

அரசாணை (நிலை) எண். 127 நாள்: 20.11.07

படிக்க:

1) முதன்மை தலைமை வனப்பாதுகாவலர், கடிதம் எண்.டி1/66982/04, நாள் 19.4.05
2) முதன்மை தலைமை வனப்பாதுகாவலர், கடிதம் எண்.டி1/66982/04, நாள் 3.10.07

=====

ஆணை:-

பாலக்காடு மாவட்ட மலை உரிமையாளர்கள் மற்றும் மர வியாபாரிகள் சங்கம், வனப்பொருட்களை பொள்ளாச்சியில் தொடங்கி மதுரை வரை எடுத்துச்செல்வதில் சில இன்னல்களை அடைவதாகவும் கேரள மாநிலத்திலிருந்து வனப்பொருட்களை நடுப்புனி மற்றும் கோபாலபுரம் கிராமங்களின் வழியாக பொள்ளாச்சி சந்தைக்கு எடுத்துச்செல்கையில் கேரள மாநிலத்தில் மட்டுமே சோதனை செய்யப்படுகிறதென்றும் அப்பகுதியில் தமிழ்நாடு வனத்துறை சோதனை சாவடி எதுவுமில்லாததால் வாகனங்கள் சோதனைக்கு உட்படுத்தப்படுவதில்லை என அச்சங்கம் தெரிவித்துள்ளது என முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் ஒன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் கூறியுள்ளார். இந்திரா காந்தி வனச்சரணாலயம் மற்றும் தேசிய பூங்கா, பொள்ளாச்சி என்ற இடத்தில் தற்போது 8 சோதனைச் சாவடிகள் இயங்கி வருகின்றன என்றும் பொள்ளாச்சி கோபாலபுரம் சாலையில் சோதனைச்சாவடி ஒன்றை அமைப்பதன் மூலம் அச்சாலையினை சமூக விரோத சக்திகள் பயன்படுத்துவதை தடுக்கலாம் என வனப்பாதுகாவலர் தெரிவித்துள்ளதாக முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் கூறியுள்ளார். தமிழ்நாடு தடிமர போக்குவரத்து விதிகளின் விதி 5(1) இன்படி மாவட்ட ஆட்சியர், மாவட்ட அரசிதழில் சோதனை நிலையம் அமைக்க (Checking Station) ஓர் அறிவிக்கையை வெளியிடவேண்டும் என்றும், பொள்ளாச்சி–கோபாலபுரம் சாலையில் புதிய சோதனைச் சாவடி ஒன்றை அமைக்கலாம் எனவும், அதை கோயம்புத்தூர் வட்ட சரகம் மற்றும் கோட்டங்களில் பணிபுரியும் பணியாளர்களைக் கொண்டு இயக்கலாம் எனவும் முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் தெரிவித்துள்ளார். இப்புதிய சோதனைச் சாவடி அமைப்பதற்காக கூடுதல் செலவு எதுவும் இல்லை என்றும் தெரிவித்து, இப்புதிய சோதனைச் சாவடி அமைக்கும் பொருட்டு அரசு ஆணை வழங்கலாம் என முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் பரிந்துரை செய்துள்ளார்.

2. முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் அவர்களுடைய பரிந்துரையினை ஏற்று, பொள்ளாச்சி– கோபாலபுரம் சாலையில் சோதனைச் சாவடி ஒன்றை அமைக்க அறிவிக்கை ஒன்றை வெளியிடுமாறு கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

3. இச்சோதனைச் சாவடியினை பொள்ளாச்சி சரகத்திலிருந்து இரண்டு வனக்காப்பாளர்களைக் (Guard) கொண்டு இயக்கவேண்டும் என்றும் இதனால் அரசுக்கு கூடுதல் செலவு ஏற்படக்கூடாது என முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் அறிவுறுத்தப்படுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

ரா.ராஜகோபால்
அரசு செயலாளர்

பெறுநர்
முதன்மை தலைமை வனப்பாதுகாவலர், சென்னை–15.
மாவட்ட ஆட்சியர், கோயம்புத்தூர்.
வனப்பாதுகாவலர், கோயம்புத்தூர்.
இருப்புக் கோப்பு/உதிரி நகல்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்